





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 05.10.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- மத்திய பிரதேச மாநில அரசானது **நிவாரி(Niwari)** என்ற புதிய மாவட்டத்தை உருவாக்கியுள்ளது. நிவாரி மத்திய பிரதேசத்தின் **52வது மாவட்டம்** ஆகும். இது 2018ம் ஆண்டு அக்டோபர் 01 அன்று நடைமுறைக்கு வந்தது.
  - திகம்கார்க் மாவட்டத்திலிருந்து ஒரு பகுதியை பிரித்து நிவாரி மாவட்டம் உருவாக்கப்பட்டது.

- **பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா(PMAY)-வை** சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களின் வரிசையில், **உத்திரப் பிரதேச மாநில** அரசானது 11 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்டித் தந்ததன் மூலம் முதலிடத்தில் உள்ளது.
- குறிப்பு:
  - பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கடந்த 2015ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
  - 2022 மார்ச் 31க்குள் 20 மில்லியன் வாழத்தகுந்த வீடுகளை கட்டி ஏழைக் குடும்பங்களுக்கு அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவிற்கு தேவையான மருத்துவ பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை வழங்குவதற்காக இந்தியா விமானப்படை சார்பில் **C-130J மற்றும் C-17** என்னும் இரு வானூர்திகளும், இந்திய கடற்படை சார்பில் **INS TIR, INS Sujatha** மற்றும் **INS Shardul** ஆகிய பேரிடர் மீட்பு கப்பல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
  - இந்தியா சார்பில் வழங்கப்படும் இந்த மனிதாபிமான உதவிகளுக்கு 'ஆபரேசன் சமுத்ரா மைத்ரி**(Operation Samudhra Maitri)**' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- குறிப்பு
  - கேரளாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது இந்திய

இராணுவத்தால், செய்யப்பட்ட மீட்பு நடவடிக்கையின் பெயர் - **‘operation shayog’**

- இந்திய கடற்படையால் செய்யப்பட்ட மீட்பு நடவடிக்கையின் பெயர் - **‘operation madad’**

- நாட்டின் முதல் **சோளத் திருவிழா(Corn Festival) மத்தியப் பிரதேச மாநிலத்தில்** உள்ள சிந்த் வாராவில் நடைபெற்றுள்ளது. இத்திருவிழாவானது சர்வதேச நிகழ்வாகும்.
  - இந்தியாவின் மிக அதிக அளவில் சோளம் உற்பத்தி செய்யும் மாவட்டமாக **சிந்த்வாராவும்**, அதிக அளவில் சோளம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் மத்திய பிரதேசமும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் **ரிபப்ளிக் ஆப் குரோசியா(Republic of Croatia)** நாட்டுக்கான இந்தியத் தூதராக **அரிந்தம் பஷியை** நியமனம் செய்துள்ளது.
  - மேலும், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஸ்பெயின் நாட்டுக்கான இந்திய தூதராக சஞ்சய் வர்மாவை நியமனம் செய்துள்ளது.

- வட அமெரிக்க நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை அதிகப்படுத்தும் நோக்கத்திற்காக, அமெரிக்கா, கனடா மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகள் **USMCA (United States, Mexico and Canada)** என்றழைக்கப்படும் திருத்தப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தின் மீது ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளது.
  - இதன்மூலம் **ஜனவரி 1, 1994ம்** ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு **(NAFTA – North American Free Trade Agreement)** பதிலாக **USMCA** என்ற ஒப்பந்தம் மாற்றாக அமையும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

- **3வது இளைஞர் ஒலிம்பிக்** விளையாட்டுப் போட்டிகள், அர்ஜென்டினாவில் உள்ள **ப்யூனோஸ் ஏர்ஸ்** நகரில் அக்டோபர் **06 முதல் 18** வரை நடைபெறவுள்ளது.
  - இப்போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்களின் அணிவகுப்பில் இந்தியாவின் தேசிய கொடியினை துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை மனுபேகர் ஏந்திச் செல்ல உள்ளார்.

- புது டெல்லியில் நடைபெற்ற **டிராக் ஆசிய கோப்பை சைக்கிள் போட்டியில்,** இந்தியாவானது **6 தங்கம், 5 வெள்ளி, மற்றும் 2 வெண்கலம்** வென்று பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்து சாதனைப் படைத்துள்ளது.
  - இந்தியாவிற்கு அடுத்து இந்தோனேஷியா (4 தங்கம், 3 வெள்ளி மற்றும் 1 வெண்கலம்) இரண்டாவது இடத்திலும், ஹாங்காங் (4 தங்கம் மற்றும் 2 வெண்கலம்) மூன்றாவது இடத்திலும் உள்ளது.

# முக்கிய தினங்கள்

- **உலக விலங்குகள் தினம் - அக்டோபர் 04**
  - விலங்குகளின் நலனை மேம்படுத்தவும், விலங்குகளையும் ஓர் உயிராக மதிக்கவும், அவற்றின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலகம் முழுவதும் ஆண்டுதோறும் அக்டோபர் 04 அன்று உலக விலங்குகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
- குறிப்பு:
  - உலக விலங்குகள் **தினம் முதன் முதலாக 1925ம் ஆண்டு ஜெர்மனியில்,** ஆபத்தான நிலையில் இருக்கும் விலங்குகளுக்காக (**endangered animals**) மட்டுமே கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.



We Shine Academy™